ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2209/42 - 2021 ජනවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.07

*2209/42 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. : 03/2021*

**போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு மீதான வரி**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் ;

(1) இலங்கையில் தாபிக்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் உற்பத்திச்சாலை ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற கள்ளு லீற்றர் ஒன்றுக்கு ரூபா இருபத்தைந்து (ரூ. 25/-) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டுமெனவும் ;

ஆயினும் எவ்வாறாயினும், போத்தலில் அடைக்கப்பட்டு இலங்கைத் தீவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுகின்ற மேற்குறித்த கள்ளின் எத்தகைய அளவு தொடர்பிலும் வரித் தீர்வை அறவிடப்படுதலாகாது எனவும் ; மற்றும்

(2) 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 1998/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் : இல. 993 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது எனவும்

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, சனவரி 07.

01-555